# நாட்டுப்பற்றும் தாய்மொழிப்பற்றும்

''பற்று'' என்ற சொல், பிடி, ஏற்றுக்கொள், அன்பு, உறவு, விருப்பம் என்பவனற்றைக் குறிப்பதாகும். இங்கு, பற்று என்பதற்கு அன்பு என்பதே சிறந்த பொருளாகும். இப்பற்று என்பது பலவகைப்படும். எனினும், அவற்றுள் மிக முக்கியமானவை நாட்டுப்பற்றும், தாய்மொழிப்பற்றும் ஆகும். இவ்விரண்டும் நமது இரு கண்களாக மதிக்கப்பட வேண்டியது மிக முக்கியம்.

நாடு எத்தன்மையுடையது என்பது திருக்குறளில் மிக அருமையாகக் கூறப்பட்டுள்ளது.

**"தன்னா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
**செல்வரும் சேர்வது நாடு"**

இதன் பொருள், குறையாத விளைபொருளும் தக்க அறிஞரும் கேடில்லாத செல்வம் உடையவரும் கூடிப் பொருந்தியுள்ள நாடே நாடாகும் என்பதாகும்.

நாட்டுப்பற்று என்பது மிக இனிமையான, தன்னலமற்ற ஒரு சொல். நாட்டுப்பற்று ஒருவனிடம் சிறிதளவு இருந்தால்கூட அவன் தன்னலமற்றவன் என்று கருதப்படுவான். இவ்வுலகில் பிறந்து வாழ்வது வெறும் உணவுக்கும், உடைக்கும், ஆடம்பரத்திற்கும் அல்ல. வாழும் சிறு காலத்தில் சிறந்த கல்விகற்று, அக்கல்வியை மற்றவர்களுக்கும் எடுத்துக்கூறுவதே சிறந்த பயனாகும். நாட்டு மக்களை முன்னேற்ற வேண்டும் என்ற ஒரு பற்று இல்லாமல் எவ்வாறு நாம் நாட்டுக்குத் தொண்டு புரிய முடியும்? ஆதலால், மற்றவர்கள் முன்னேறுவதைக் கண்டு நாம் மகிழ்ந்து வாழ்வதே சிறந்த நாட்டுப்பற்றாகும்.

மேற்குறிப்பிட்டபடி, இயற்கையாகவே நாட்டுப்பற்று உடையவர்கள் ஒரு சிலரே. அவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர், ''மனோன்மணீயம்'' என்ற நூலை இயற்றிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள். சுந்தரம் பிள்ளையவர்கள் தம்மிடம் உள்ள நாட்டுப்பற்றைத் தம்முடைய நாடகத்தில் அவ்வப்போது வெளியிடுகிறார். இதன்மூலம், அவர் நாடகத்தைப் படிப்பவர்களிடமும் நாட்டுப்பற்றைத் தூண்ட விழைகிறார். ஏனெனில், அந்த நாடகத்தை நாம் படிக்க முற்பட்டால் நாமும் நாட்டுப்பற்றுக்கு நம் பங்கையாற்றுவதற்குச் சிந்திப்போம்.

''எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே, அவர் சிந்தையில் ஆயிரம் எண்ணங்கள் தோன்றிச் சிறந்ததும் இந்நாடே'', ''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே''. என்பன போன்ற பாரதியாரின் பாடல்கள் விளக்கும் கருத்துகள் சுந்தரம் பிள்ளையவர்களின் மொழியில் அடங்கியுள்ளன. பாரதிக்கு முன்னமே இதுபோன்ற புதுமைத் தமிழ் நூல் ஒன்று தோன்றியது தமிழர்களின் நற்பேறு என்றே சொல்ல வேண்டும்.

மேலும், நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் அரிய பொருளாக மதிக்கத்தக்கவை என்கிறார் சுந்தரம் பிள்ளை.

**"அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னில்**
**நாட்டபி மானமுள் மூட்டிய சினத்தீ**
**அன்றோ வானோர்க்கு என்றுமே உவப்பு"**

என்ற அடிகளில் நாட்டுப்பற்றும் வீரவுணர்வும் வெளிப்படுகின்றன. சுந்தரம் பிள்ளையவர்கள் இக்கூற்றை மேலும் வலியுறுத்தும் வகையில்,

‘‘நாட்டபி மானமில் நடைப்பிண மூச்சும்’’, அதாவது நாட்டன்பு இல்லாதவர்கள் நடைப்பிணத்திற்கு ஒப்பாவர்கள் என்று கூறுகின்றார். கென்னடி, ‘‘நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே, நாட்டுக்கு நீ என்ன செய்தாய் என நினைத்தால் நன்மை உனக்கு’’, என்று கூறினார். இதன்படி, கேள்வி விடுத்துக்கொண்டே இருக்காமல் சிந்திக்க வேண்டும். அப்பொழுதுதான் நம் குறைகள் நமக்குப் புலப்படும். இவற்றைச் சரிசெய்வதையே நாம் நாட்டுப்பற்றுக்கு ஆற்றும் பங்காகக் கருத வேண்டும். தேசியச் சேவை புரிவது நாட்டுக்குச் செய்யும் பணிகளுள் ஒன்று. இது ஒருவரிடத்தில் அமைந்திருக்கும் நாட்டுப்பற்றை உணர்த்தும். நம் கடமைகளில் நாட்டுப்பற்றுக்கு முதலிடம் கொடுத்தல் பெருமைக்கு உரியதாகும்.

**“செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்**
**தேன்வந்து பாயுது காதினிலே’’,**

என்றார் பாரதியார். இது நாட்டுப்பற்றினை மேலும் நினைவூட்டுகின்றது.

**“மாரத வீரர் மலிந்த நன்னாடு**
**மாமுனிவோர் பலர் வாழ்ந்த பொன்னாடு”**

இதையும் கூறிய பாரதியார் போன்ற பெரியோர்கள், நாட்டிற்கெனப் பல வழிகளில் உழைத்துள்ளனர்.

மகாத்மா காந்தி நாட்டின் சுதந்திரத்திற்காகப் பல துன்பங்களுக்கு இடையே மனந்தளராது பாடுபட்டார்; வெற்றியும் கண்டார். நம் தாய்நாடான சிங்கப்பூரின் சுதந்திரத்திற்கும் பிரதமர் லீ குவான் இயூ போன்ற தலைவர்கள் பாடுபட்டனர். அவர்களும் வெற்றி கண்டனர். இன்று சிங்கையும் பல துறைகளில் பெரும் முன்னேற்றத்தை அடைந்துள்ளது இது பெருமைக்குரியது. இவ்வாறு, நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பலர் பல வழிகளில் பாடுபட்டு வெற்றி கண்டுள்ளனர். இவையெல்லாம் இவர்களுடைய நாட்டுப்பற்றினை எடுத்துக்காட்டுகின்றன.

**“முப்பது கோடியும் வாழ்வோம் - வீழில்**
**முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்’’,**

என்று பாரதியார் நாட்டுப்பற்றின் உச்சிக்கே செல்கிறார். நாட்டிற்காக உடல், பொருள், ஆவி ஆகியவற்றை அளிக்க முன்வர வேண்டும். ‘‘பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே’’, என்கிறார் பாரதியார்.

பத்து மாதங்கள் சுமந்து, பெற்று, நம்மைப் பேணி வளர்ப்பவள் தாய். எல்லோரையும் விட அவளே சிறந்தவள், பெருமைக்குரியவள். அளவுக்கு மீறிய அன்பைக் காட்டுபவள் நம் தாய். அந்தத் தாய்க்குச் சமமாக நாம் பிறந்த தேசத்தையும் பேசும் மொழியையும் வணங்குவது முற்காலத்திலிருந்து இருந்துவரும் பழக்கமாகும். ஆதலால், பிறந்த நாட்டைத் ‘‘தாய்நாடு’’ என்றும், விவரம் தெரிந்தது முதல் உணர்ந்து பேசும் மொழியை மட்டமே ‘‘தாய்மொழி’’ என்றும் கூறுகிறோம். நமது தாய்மொழியே எல்லாவற்றையும் விட மிகச் சிறந்ததாகும். தமிழ்ப் பெரியார் திரு.வி.க.அவர்கள், ‘‘பெற்ற தாயின் அன்புக்கும் பிறந்த நாட்டின் பற்றுக்கும் ஊற்றாய் இருப்பது பேசும் மொழியே ஆகும் என்றார். பேசும் தாய்மொழியின் மாட்டு அன்பில்லா ஒருவன் தாயையும் நாட்டையும் பழித்தவனாவான்’’, என்றும் கூறியுள்ளார். அறிஞர்கள் ‘‘மொழியே மக்களின் மனத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி’’, என்பர்.

ஒரு மொழி வளர்வதும் அழிந்துபோவதும் அம்மொழி பேசும் மக்களின் மன வளர்ச்சியைப் பொருத்தது. ‘‘உலகில் உள்ள மொழிகளில் உயர்ந்தது எது?’’ என்ற கேள்விக்கு ஓர் அறிஞர், ‘‘ஒருவரது தாய்மொழி’’, என்று பதிலளித்தார். இது மிக உண்மை. எல்லாருக்கும் அவரவர் தாய்மொழியே முக்கியமானது. தாய்மொழியை விட்டுவிட்டு வேறொரு மொழியைச் சிறப்போடு கையாளுவது மிகக் கடினம். ஒருவேளை வேற்று மொழியைச் சிறப்பாகக் கையாண்டாலும் நம் தாயை விட்டுவிட்டு மற்றவர் தாயின் மேல் அன்புகொள்வதுபோல் அமைந்துவிடும். ஏனெனில், தாயின் மேல் பற்றுக்கொள்வதைப் போல் தாய்மொழியின் மீது அன்புகொள்வதும், தாயைக் காப்பாற்றுவது போல் தாய்மொழியைக் காப்பதும் ஒவ்வொரு மனிதனின் கடமையாகும். அதைத்தான் ‘‘தாய்மொழிப்பற்று’’ என்று கூறுகிறோம்.

மொழிப்பற்று ஏற்பட வேண்டுமானால் தாய்மொழிப் படிப்பு மிக முக்கியம். தமிழ்நாட்டில், தாய்மொழியைக் கடவுளுடன் தொடர்புபடுத்திப் பேசும் வழக்கம் உண்டு.

**“கண்ணுதற் பெருங் கடவுளும் கழக மோடமர்ந்து**
**பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந்தமிழ்’’,**

என்று தமிழ் போற்றப்படுகிறது. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தமிழ்மொழிக்கு இறைவனை உவமையாகக் கூறியுள்ளார்.

**“தித்திக்கும் தெள்ளமுதாய்த் தென்னமுதின் மேலான**
**முத்திக் கனியே என் முத்தமிழே - புத்திக்குள் உண்ணப்படும் தேனே’’,**

என்று தமிழைப் பற்றிக் கூறுகிறார். சிறப்புற்ற பல மொழிகளைப் படித்தாலும், ஒருவர் சிந்திப்பது எல்லாம் தாய் மொழியில்தான் **“எல்லையற்ற இன்பத்திலும் துன்பத்திலும் ஒருவர் வாய் தாய்மொழியையே பேசும்’’**, என்று கூறுவர். பழங்காலத்தில் பன்மொழிகளில் புலவர்களாக விளங்கியவர்கள் கூடத் தாய்மொழிப் பற்றின் காரணத்தால் பல அருமையான நூல்களைத் தங்கள் தாய்மொழியிலேயே இயற்றியுள்ளார்கள். கவிதைப் புலமை வாய்ந்த இரவீந்தரநாத் தாகூர் ஆங்கில மொழியில் சிறந்து விளங்கினார். ஆயினும், அவர் எழுதிய ‘‘கீதாஞ்சலி’’ என்ற நூலை முதன்முதலாக வங்க மொழியான அவர் தாய்மொழியில்தான் எழுதினார். பின்புதான் அதை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்தார்.

அதேபோன்று, இந்தியாவின் தேசத் தந்தையாராகக் கருதப்படும் காந்தி அடிகள், தம் சொந்த வரலாறான, ‘‘சத்திய சோதனை’’ என்ற நூலைக் குஜாராத்தி மொழியில் முதலில் இயற்றிவிட்டுப் பின்னரே அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அப்பெரியார்கள் போல நாமும் தாய்மொழிப் பற்றும் நாட்டுப் பற்றும் கொண்டவர்களாகிச் சேவை செய்ய வேண்டும். பழந்தமிழ் நாட்டில் அரசர்கள் தாய்மொழிப் பற்றின் காரணத்தால் புலவர்களை அதிக மரியாதையுடன் உபசரித்தனர், நீண்ட நாள் வாழச் செய்யும் பெருமைக்குரிய நெல்லிக்கனியை அதியமான் ஔவையாருக்குக் கொடுத்ததும் மொழிப்பற்றால் நடந்த செயல் ஆகும்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்,

**‘‘‘தமிழுக்கும் அமுதென்று பேர்,**
**தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்,**
**தமிழ் எங்கள் உயிருக்கு நேர்’’,**

**“எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**
**மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு!”**

என்றெல்லாம் தாய்மொழியின்மீது அவர் கொண்டுள்ள பற்றை வெளிக்காட்டுகின்றார். எந்த மதத்தினராக இருந்தாலும் சரி, அவர்தம் தாய்மொழியை அவரவர் பேணிக்காக்க வேண்டும். இக்கடமையிலே கண்ணும் கருத்துமாக இருந்து உழைக்க வேண்டும். முடிந்த மட்டும் தம்மால் இயன்றவரை தொண்டு செய்ய வேண்டும். அதையும் சீரிய முறையில் செய்யப் பழகிக் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு செய்யாவிட்டால் தாய்மொழியானது காலப்போக்கில் மறைந்துவிடும். மொழிப்பற்று மிக்க அனைவரும் தங்கள் தொண்டால் அம்மொழியை வளர்க்க வேண்டும்.

**“சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச்**
**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்”,**

என்னும் சுப்பிரமணிய பாரதியாரின் வாக்குப்படி உழைக்க வேண்டும்.

நம்மிரு கண்களில் வலது கண் சிறந்ததா, இடது கண் சிறந்ததா என்று கூறமுடியாது. அதேபோல்தான், நாட்டுப்பற்று, தாய்மொழிப்பற்று ஆகியவற்றில் எது சிறந்தது என்று கூற முடியாது. இதில் ஒன்றை இழந்தால்கூட நம் கையே நம் கண்ணைக் குத்துவது போலாகிவிடும் நம்மிரு கண்களில் ஒன்றையிழந்தால்கூடப் பயனில்லாமல் போய்விடும்.

ஆகையால், இரு கண்களாக மதிக்கத்தக்க நாட்டுப்பற்றையும் தாய்மொழிப்பற்றையும் பேணிக் காக்க வேண்டும். இதுவே நம் கடமையும் ஆகும்.

**சீ.புஷ்பலதா**
**புகுமுக வகுப்பு 3 (1984)**
**கிம் மோ உயர்நிலைப் பள்ளி**